International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# எடுத்துரைப்பியல் நோக்கில் வாயில் கூற்றுகள்

**சந்தியா**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர்

**முனைவர் ஆ. அருணாச்சலம்**
இணைப்பேராசிரியர், பெரியார் கலைக்கல்லூரி, 607001

**ஆய்வு சுருக்கம்**

அகமாந்தர்களின் உள்ளுணர்வு அகமாந்திரர்களின் உறவு நிலையை நிகழ்வு நிகழ்வுகளை கண்முன்னே எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்

**முதன்மைச் சொற்கள்:** கூற்றுகள், அக மாந்தர்கள், கலித்தொகை, சங்க இலக்கியம்

**முன்னுரை**

மனிதனின்வாழ்க்கை இன்பம், துன்பம் இரண்டும் கலந்தததுதான். சங்க இலக்கியங்களில் எல்லாப்பகுப்பு முறையும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அகமும் புறமும் சேர்ந்தது தான் சங்க இலக்கியப் பாடல்கள். களவு, கற்பு என்ற பகுப்பு முறைகாணப்படுகிறது. திருமணத்திற்கு முன் வாழும் வாழ்க்கை களவு என்றும், திருமணத்திற்குப் பின்னர்வாழும் வாழ்க்கை கற்பு என்றும் கொள்வது தமிழ் நெறி. தலைவன், தலைவியின் கூடலில் தழைத்தாலும், ஊடலில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப்பிரிவு நிலையை எடுத்துரைக்கும் பாடல்கள் கலித்தொகையில் உள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாக வருவது கலித்தொகை. அன்பின் ஐந்திணைக்கு உரியராகி அகவொழுக்கத்தை மேற்கொள்பவர்கள் தலைவன் தலைவி இருவராவர். அவ்விருவருக்கும் உதவி செய்பவர்களாக வாயில்கள் விளங்குகின்றனர். அவ்விருவருக்குள்ளும் ஊடல் ஏற்படும் போதுதூது சென்று அவர்களின் ஊடலைத்தீர்ப்பதில் வாயில்கள் எடுத்துரைக்கும் விதம் தனிச்சிறப்பானது. கலித்தொகையில் உள்ளவாயில்கள் பற்றிய இரண்டு பாடல்களும் மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. அவ்வாறு காணப்படும் பாடல்களில் எடுத்துரைப்பு எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. ஆய்வுகட்டுரையின் வரையறை கருதிகலித்தொகையில் நெய்தல் திணையில் உள்ள இரண்டு வாயில்கள் கூற்றுப்பாடல்களும் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**எடுத்துரைப்பியல் கோட்பாடு**

ஒருநிகழ்ச்சி நடக்கிறது. அந்தநிகழ்ச்சியை மொழிபடுத்தும் போது நடக்கிறமாற்றங்களையும் அந்த மாற்றங்களை நிகழ்த்துகிற தன்னிச்சையான செயல் போக்கினையும் விளக்குவதே எடுத்துரைப்பியல். எடுத்துரைப்பியல் படைப்பாளியையோ, வாசகரையோ கருத்தில் கொள்வதில்லை. பதிலாகப்படைப்புகளில் இருந்தே உட்கிடையான படைப்பாளியையும், உட்கிடையான வாசகரையும் எடுத்துரைப்பியல் கருத்தில் கொள்கிறது. இதன் மூலம் இவ்வகை திறனாய்வு படைப்பாளியையோ வாசகரையோ மையப்படுத்தாமல் படைப்பின் உரையையே மையப்படுத்துவதாக உள்ளது. எடுத்துரைப்பியல் கோட்பாடுகளைப்

பயன்படுத்தி ஒருகதை அல்லது உரையாட லில், கதை சொல்பவர் அல்லது பேச்சாளர் எவ்வாறு கதையைத் தொடங்குவதையும், கதையின்மையக் கருத்துக்களை வெளிப் படுத்துவதையும், கதையின்முடிவை எவ்வாறு கொண்டு வருவதையும் ஆராய்வதே வாயில்கள் ஆகும்.

**எடுத்துரைப்பியல் நோக்கில் வாயில்கள்**

கதையின் தொடக்கம் என்பது ஒருகதை எப்படித் தொடங்குகிறது, வாசகரின் கவனத்தை ஈர்க்கவும் கதையின் மீதானா ஆர்வத்தைத்தூண்டவும் முக்கியமானதாக உள்ளது. கதையில் இடம் பெறும் முக்கிய நிகழ்வுகள் கதாபாத்திரங்கள் மற்றும் கருப் பொருள் ஆகியவை மையக்கருத்துக்களாக அமைகின்றன. கதை முடிவு வாசகர்களுக்கு ஒருதி ருப்திகரமான உணர்வை அளிக்க வேண்டும்.

**வாயில்களின் வகைப்பாடுகள்**

தொல்காப்பியர் கூறியுள்ள வாயில் உறுப்பினர்களை நாம் மூன்றாக பிரித்துக் கொள்ளலாம்.

**உயர்ந்த நோக்கில் உறுப்பினர்கள்**

**ஒத்தவாயில் உறுப்பினர்கள்**

**தாழ்ந்தவாயில் உறுப்பினர்கள்.**

அறிவர், செவிலித்தாய் முதலியோர் எல்லாம் உயர்ந்தவாயில்களாவர். தோழி, பாங்கன் முதலியோர் எல்லாம் ஒத்த உடன் பழகும் வாயில்களாவர். இளையோர், கூத்தர், விறலியர் முதலியார் எல்லாம் தாழ்ந்தவாயில் களாவர். எந்த வாயில்களாக இருந்தாலும் இவர்கள் எல்லாம் தலைவன், தலைவி இருவரிடத்தும் அன்பு கொண்டு அவர்கள் சிறப்பாக வாழ உதவுபவர்களாக விளங்குபவர்கள். இதனைத் தொல்காப்பியர்,

**“எல்லாவாயிலும் இருவர்தே எத்தும்[1]**

**புள்ளிய மகிழ்ச்சி பொருளை என்ப”**

**என்று நூற்பாவில் வெளிப்படுத்தியுள்ளார்.**

**தலைவன் தலைவியை இணைக்கும் வாயில்கள்**

தலைவன், தலைவி நல்லுறவு அமையத்தூது செல்வோரை அகத்திணை வாயில்கள் என்பர். தலைவனும் தலைவியும் தம் உள்ளத்துள் உணர்ந்து அனுபவிக்கும் இன்பம் இத்தன்மை உடையது எனப்பிறருக்கு விளக்க இயலாததாக இருப்பது. தம் முள்ளும் ஒருவருக்கொருவர் விளக்க இயலாததாக இருப்பது. ஆகவேகாதல் ஒழுக்கத்தை “அகம்” என்பது மிகவும் பொருத்தமாகும் என்றார் நச்சினார்க்கினியர். அகம் என்பது அகத்தே (உள்ளத்தே) நிகழும் இன்பத்திற்கு ஆகிவந்தது என்பது அவர் கருத்து.

அகம் என்பது அகப்பொருள் தலைவர்கள் வாழும் இல்லம். கட்டப்பட்ட இல்லத்துக்கு மூன்றில், நுழைவாயில், புழைக்கடை என்னும் வாயில்கள் இருப்பது போல அகத்திணை தலைவர்களாகிய தலைவந்த லைவியரின் அகமாகிய உள்ளங்கள் ஒன்றிலொன்று நிலையாக நுழைந்திருப்பதற்கு வாயிலல் களாச்சிலர் இருப்பார். இந்தவாயில்கள் யார்யார் என்பதைத் தொல்காப்பியர் பட்டியலிட்டுக் காட்டுகிறார் (கற்பியலில் 52)

தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர் (ஏவலர்), கூத்தர், விறலியர் (ஆடல்மகள்), அறிவர், கண்டோர் என்னும் 12 பேர்வாயில்கள்.

**களவு வாழ்க்கையில் உரையாடுவோர்**

**பார்ப்பேன் பாங்கன் தோழி செவிலி[2]**

**சீர்த்தகு சிறப்பற் கிழவன்கிழத்தியோடு**

**அளவியன்மரபின் அறுவகையோரும்**

**களவினிற்கிளவிக்கு உரியர்என்ப**

(தொல்.பொருள்.489)

பார்ப்பன், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி ஆகியோர் அறுவரும் களவு வாழ்க்கையினை உரையாடுபவர்கள்

**கற்பு வாழ்க்கையில் உரையாடுவர்**

**பாணன்கூத்தன்விறலிபரத்தை[3]**

**யாணம்சான்ற அறிவர்கண்டோர்**

(தொல். பொருள். 490)

பாணன்கூத்தன், விறலி, ஞனம்சான்ற அறிவர், கண்டோர், பரத்தை ஆகிய அறுவரும்கற்பு வாழ்க்கையினை உரையாடுபவர்கள்.

**ஊடல் தீர்க்கும் வாயில்கள்**

தலைவலி, தலைவன்மீது கொள்ளும்பிணக்கு “ஊடல்” எனப்படும். கற்புவாழ்வின் போது பரத்தையர் பிரிவு நிகழ்த்தும் தலைவன்“ அயல்மனை, அயற்சேரி, புறநகர் என்ற மூன்று இடங்களுக்கும் சென்று தங்கி விடுவான். அப்போது தலைவிக்கு ஊடல் ஏற்படும். தலைவிக்கு ஏற்படும் ஊடலைத் தீர்த்து மீண்டும் தலைவன் தலைவியின் கற்புவாழ்வை (இல்லறவாழ்வை) இணைத்து வைக்கும் இனிய பணியை ஆற்றுபவர்கள் வாயில்கள் எனப்படுவர்.

**கொளைவன் பாணன்பாடினி கூத்தர்[4]**

**இளையர்கண்டோர் இருவகை**

**பாங்கர்பாகன் பாங்கி**

**செவிலி அறிவர்காமக் கிழத்திகாதற் புதல்வன்**

**விருந்து ஆற்றமை என்று இவை ஊடல்**
**மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள்**

என்று **"நம்பி அகப்பொருள்"** நூற்பா (68) எனவாயிலல்களைப்பட்டியலிட்டு காட்டுகிறது.

இயற்கைமனிதனின் வாழ்வில் ஒன்றிணைந்த வையாகும். ஒன்று இல்லையென்றால் மற்றொன்று இல்லை. அன்றையகாலம் முதல் இன்று வரையிலும் மனிதன் இயற்கை மீதான அன்பு அப்படியே உள்ளது. சங்ககாலத்தில் மக்கள் நில அமைப்பிற்கு ஏற்பவாழ்க்கை அமைத்து வாழ்ந்தது எதன் பொருட்டோ தலைவன், தலைவி விட்டுப் பிரிந்து சென்று, தான் சொன்ன பொழுதில் வராமல் இருந்தால் தலைவித்தன் ஆற்றா மையைப் பலவாறு வெளிப்படுத்துகிறாள். இதைகண்ட ஏவல் பெண்டீர் தலைவன் வருவதைக்கண்டுதலைவி உயிர் பெற்றதைக் காண்கின்றோம். தலைவன் வரவில்லை என்ற எண்ணத்தில் தலைவி பலவாறு பேசுகிறாள். தலைவன் வந்ததும் எதுவும் பேசாமல் அமைதியாகிறாள். மலரும் மாலை அணிந்த கண்ணன்பார்த்த பார்வையில் பகைவர்கள் ஓடினர்.

**ஒல்லாதார் உடன்று ஓட, உறுத்து, உடன்**[5]
**எறிதலின்** (கலி.134-2)

அதுபோல் தலைவன் வந்தவுடன் எதுவும் பேசாமல் அமைதியானாள். அவன் பார்த்த பார்வையில் தலைவி கண்ணனின் ஆழி சக்கரம் பகைவர் யானையின் நெற்றியில் பதிந்தது போல, சூரியன் மலையில் மறைந்தது போல தலை விதலைவனைக் கண்டவேகத்தில் அனைத்தையும் மறந்து அவன் பின்னே மறைந்தாள். கோவம் இருந்தாலும் தலைவனைகாகண்டவேகத்தில் அன்பை வெளிப்படுத்தினாள். சூரியன் மறைந்ததால் இரவு பொழுது வந்தது கடல் அலைகள் கரையேறியது. கழித்துறையில் இருந்தவண்டுகள் நீங்கி மலர்கள் உறங்கின. அந்த வேலையில் மிகுந்ததுன்ப சூழலில் தவித்தாள் தலைவி.

**ஆய்மலர்ப் புன்னை கீழ்அணிநலம் தோற்றாளை**[6]

**நோய்மலி நிலையளாத்துறப்பாயால் மற்றுநின்**

**வாய்மைக்கு பெரியது ஓர்வஞ்சமாகும்**

**கிடவாதோ** (கலி.135)

அவள் புன்னை மரநிழலில் தன் அழகை உன்னிடம் இழந்தாள். நீகொடுத்த நம்பிக்கை யில் தன்பெண்மை நலத்தையும் தோற்றாள். யாரும் அறியாவண்ணம் அவளுடன் கூடி மகிழ்ந்தாய். இப்பொழுது பேசாமல் விட்டு விட்டாய். உன்காதல் நோயில் அவள் தன் வளையல்கள் கையில் இருந்து நழுவும் படியும் வருந்த செய்துவிட்டாய். ஊரார் இகழ்ச்சி சொற்கள் பேசும் படியும் செய்து விட்டாய். இது உன் குடி பெருமைக்கும் உன் வாய்மைக்கும் உன் புகழுக்கும் நற் பெயரை ஈட்டிதருமா? என்று தோழி தலைவனுக்கு எடுத்துரைக்கிறாள் விரைந்து தலைவியைப் பார்க்க செல்லுமாறு அறிவுரை யும் கூறுகிறாள். தலைவியை ஊரார் பேசும் பழிச் சொற்களைத் திருக்குமாறும் எடுத்துரைக்கிறாள்.

இப்பாடல் நெய்தல் திணையில் வந்தாலும் திணை என்னவோ மருதம் பற்றி பேசுகிறது. தலைவி மருதத்திணையில் தலைவனோடு ஊடல் கொண்டது எண்ணிவருந்துகிறாள். இங்குத்திணை மயக்கம் ஏற்படுகிறது. கருப்பொருளான மரம் (புன்னைமரம்) இப்பாடலில் காணமுடிகிறது.

இப்பாடலில் கடல் பற்றிய செய்திகளும் வருகின்றது. நெய்தல் திணையின் கருப்பொருளில் ஒன்று தொழில். நெய்தல் நிலத்து மக்கள் மீன் பிடித் தொழிலைச் செய்வர்.

**கரை காணாப்பௌவத்து கலம் சிதைந்து ஆழ்பவன்**[7]

**திரைதரப்புனை பெற்று, தீது இன்ற உய்ந்தாங்கு** (கலி.134-25)

தலைவிபனி மிகுந்த நேரத்தில் துன்பம் கொண்ட நெஞ்சோடு இருக்கிறாள். தலைவ னைக் காணமுடியாததால் கடலையே பார்த்துக் கொண்டு அவலத்தோடு காணப் படுகிறாள். கடலில் சென்ற மரக்கலம் சிதைந்து கரைசேர வழி ஏதும் இல்லாமல் தவித்தவர்களுக்கு தெப்பம் (புனை) கிடைத்து கரைசேர்ந்தது போல் தலைவனைக் காணாமல் தலைவி துன்பக்கடலில் மூழ்கி வருந்தி கொண்டிருந்தாள். அதைவாயில்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். சற்று நேரத்தில் தலைவன் வந்து நின்ற வேகத்தில் தலைவி உயிர்பெற்றாள். அதை வாயில்கள் அழகாக எடுத்துரைக்கிறது. நெய்தல் நிலத்தின் தொழில் மீன் பிடி தொழிலாகும். கடலில் செல்பவர்கள் திரும்பவரும்வரை உயிர்நிலை இல்லாதது. மீனவரின் உயிரும் அவர்கள் குடும்ப அவலநிலையும் இப்பாடலில் காணமுடிகிறது.

**வாயில் கூற்றில் உள்ள உவமையும் உள்ளுறையும்**

சங்ககாலத்தில் புலவர்கள் ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் புரியும் வகையில் உவமையாக கூறினர். கடல் இங்கு யானையாக, அலையின் மீதுதொட்டுச் செல்லும் காற்று பாகனாக, யானையின் கொம்புகள் சங்குகளாக, கடற்கரை மணல் கோட்டைகதவாக உவமை காட்டப்படுகிறது.

**எயில் இடுகளிறேபோல் – இடுமணல் நெடுங்கோட்டப்**[8]

**பயிலதிரை, நடுநன்னாள், பாய்ந்து ஊறு உம் துறைவ**

மணல் மேடுகோட்டையாகச் சொல்லப் படுகிறது. மணல்கோட்டையைக் காக்கும் கவசமாக அலையைச் சொல்ல படுகிறது. கோட்டையைக்காக்கும் திரையே (அலையே) அதை குத்தி கரைப்பது சரியா? தன்னால் பாதுகாக்கப் படுகின்ற மணற்குன்றத்தானே குத்திக் கரைத்தாற் போல, உன்னால் பாதுகாக்கப்படும் தலைவியைநீயே வருந்த செய்யலாமா என்ற உள்ளுறை வந்துள்ளது.

இவ்வளவு பெரிய கோட்டையையும் நில வளத்தையும் பரந்தகடலையும் கொண்ட தலைவனே ஒரு பெண்ணைத் திருமணம் செய்யாமல் விட்டு விட்டால் அது உன் குடும்பப்பெருமைக்கு ஒரு குற்றமாகும். அந்தக்காலத்திலேயே ஒரு பெண்ணை ஏமாற்றுவது குடி பெருமைக்கு இழுக்காகும் என்ற நற்பண்புகள் தெரியவருகிறது.

**குடிமைக் கண் பெரியது ஒரு குற்றமாய்கிடவாதோ** (கலி-135-8)[9]

யாரும் அறியா வண்ணம் புன்னை மரத்தடியில் அவள் பெண்மையை இழந்தாள். அதனால் திருமணம் செய்யாமல் போனால் நாளைப் பல பேர் பேசும் படி சொல்லுக்கு ஆளாவேனோ என்று வருந்துகிறாள். இது உன்பு கழுக்கு ஒரு கரும் புள்ளியாக மாறிவிடும் என்று தோழி எடுத்துரைக்கிறாள்.

**புகழ் மிக்கண் பெரியது ஒரு புகாராகி கிடவாதோ** (கலி.135-15)[10]

இவ்வாறாக, தோழி தலைவனிடம் தலைவியின் நிலைப்பற்றியும் ஊரார் பேசும் விதம் பற்றியும் தலைவனின் பெருமை, குடிப்பிறப்பு பற்றியும் எடுத்துரைக்கிறாள். இவ்வாறு தலைவன் தலைவிக்குள் இல்லற வாழ்வைச் சிறக்க செய்வது வாயில்கள் செய்யும் வேலையாகும்.

**முடிவுரை**

சங்க இலக்கிய நூல்களில் தலைவன், தலைவிபற்றிய அகசெய்திகளை எடுத்துரைப் பதில் கலித்தொகைக்கு நிகர் கலித்தொகை தான். அதற்குக் கலித்தொகையில் வாயில்கள் எடுத்துரைக்கும் விதமேதனிச் சிறப்பாகும். அக ஒழுக்க மரபில் அகமாந்தர்கள் பல்வேறு விதமாக இருப்பினும் வாயில்களே தலைவன், தலைவிக்கு இடையிலான பாலமாக இருந்து ஊடலைத் தீர்ப்பதற்கான ஒருவழியை அமைத்து தருகின்றனர். இவ்வாறாக, கலித்தொகையின் மேற்சொன்ன இரண்டு பாடல்கள் வழிகாண முடிகிறது. பிரிவிடைதாங்காத தலைவியின் துன்பத்தையும் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்துவதால் ஏற்படும் விளைவினையும் தோழி அழகாக எடுத்துரைக்கும் பாங்கு சிறப்பானது. இக்கட்டுரையில் எடுத்துரைப்பியல் பற்றியும், வாயில்களின் கூற்றுகள் பற்றியும், இரண்டு பாடல்களிலும் தலைவன், தலைவியிக்கு இடையே வாயில்கள் எடுத்துரைக்கும் விதம் பற்றியும் காண முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. கலித்தொகை மூலமும் உரையும், முனைவர்அ. மாபரிமணம் (தலைமைபதிப்பாசிரியர்), முனைவர் விசுவநாதன் (உரையாசிரியர்)
2. கலித்தொகை (விரிவாக்கிய புதிய பதிப்பு) புலியூர்கேசிகன், முல்லை நிலையம்
3. தொல்காப்பியம், புலியூர்கேசிகன், முருகன் டிஸ்ட்ரி பியூட்டர், ஆலத்தூர்
4. தொல்காப்பியத்தில் வாயில்கள், வலைத்தமிழ் தமிழ் தகவல் களஞ்சியம்
5. எடுத்துரைப் புயல் நோக்கில் சேமித்து வைத்த நிழல்கள், (சர்வதேச தமிழ் ஆய்விதழ்) இரா.பூங்கோதை, பா. நாகேஸ்வரி
6. உடலில் எடுத்துரைப்பியல் ப.உமா மகேஸ்வரி முனைவர் பட்ட ஆய்வாளர்.
7. சிறுபாணாற்றுப்படை, எடுத்துரைப்பியல் நோக்கு, மு.சங்கர் (சர்வதேசதமிழ் ஆய்விதழ்)